# யாப்பியல் நோக்கில் முத்துவீரியம், சுவமிநாதம் - ஓர் ஒப்பீடு

# Muthuviriyam, Suvaminatham in Prosody perspective – a comparison

**முனைவர் ம.சிவபாலன்,** உதவிப் பேராசிரியர், மொழித்துறை, ஸ்ரீ ராமகிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர்- 641006

**Dr Sivabalan M,** Assistant Professor, Department of Languages, Sri Ramakrishna College of Arts and Science, Coimbatore - 641006

DOI : 10.5281/zenodo.6536495

## Abstract

Tolkappiyam is considered to be the first book of five grammars in terms of relevance. The next book written on the basis of category is Veerasozhiiyam.This is an adaptation of the Northern language, so the book is largely unread. The next thing to consider is the Nannool. But we have only two Chapters in this. The next grammar book is a Thonnul Vilakkam adapted from the Tamil tradition. Then there is the Thonnool Vilakkam. After this regime change takes place in Tamil Nadu. It comes under the rule of the Western people. The last two of the five grammar texts that arose at that time were Muthu Viriyam and Swaminatham. This article sets out to compare the Prosodies of the two texts.

## ஆய்வுச்சுருக்கம்

பொருண்மை அடிப்படையில் ஐந்திலக்கண முதல் நூலாக கருத்தப்படுவது தொல்காப்பியம் ஆகும். அதன் பின்னர் பகுப்பு அடிப்படையில் எழுதப்பட்ட நூல் வீரசோழியம் ஆகும். இஃது வடமொழியின்கண் தழுவல் ஆதலால் இந்நூல் பெரிதும் பயிலப்படாமற்போனது. இதனை அடுத்துக் கருதத் தகுந்தது நன்னூலாகும். ஆனால் இதில் இரண்டு அதிகாரங்களே நமக்கு கிடைக்கப்பெற்றுள்ளன. தமிழ் மரபு தழுவி எழுதப்பட்ட இலக்கண விளக்கம் அடுத்த ஐந்திலக்கண நூலாகும். பின்னர் தொன்னூல் விளக்கமாகும். இதன் பிறகு தமிழகத்தில் ஆட்சி மாற்றம் நிகழ்கிறது. மேற்கு நாட்டவர் ஆட்சியின் கீழ் தமிழகம் முழுவதும் வருகின்றது. அக்காலத்தில் எழுந்த ஐந்திலக்கண நூல்கள் முத்து வீரியம், சுவாமிநாதம் ஆகும். இவ்விரு நூல்களின் யாப்பியலை ஒப்பீட்டு நோக்கில் ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

**Keywords :** இலக்கண ஒப்பியல், யாப்பியல், முத்துவீரியம், சுவாமிநாதம், மேனாட்டார் இலக்கணம், ஒப்பாய்வு, ஐந்திலக்கண நூல்கள்

### சுவாமிநாதம்

ஐந்திலக்கண நூல்களுள் மிகச்சிறிய நூற்பா அளவினைக் கொண்ட நூல் சுவாமிநாதம் ஆகும். இதற்குப் பிறகு ஐந்து, ஆறு, ஏழு என இலக்கணப்பகுப்பு நூல்கள் தோன்றி இருப்பினும் மொழியியல் நோக்கில் இந்நூல் தனிச் சிறப்புற்று இருப்பதைக் காணமுடிகிறது.

### யாப்பு - பிரிவு

யாப்பதிகாரமானது மூன்று மரபுகளைக் கொண்டு காணப்படுகிறது.

1. உறுப்பு மரபு 2. பாவின மரபு 3. பிரபந்த மரபு

இம்மூன்று மரபுகளில் பிரபந்த மரபு என்பது சிற்றிலக்கிய முறைமைகளைப் பற்றிக் கூறுவதாக அமைந்துள்ளது. முந்தை இரு மரபுகளான உறுப்பு மரபும், பாவின மரபும் யாப்புக்களின் உறுப்புக்களான எழுத்து, அசை, சீர், தளை, சீரின் வகை, தளையின் வகை, அடி, தொடை, தொடையின் வகை (விரி) போன்றவற்றையும், வெண்பாவின் வகை, வெண்பாவின் இனம், வகை போன்றவற்றையும் விளக்கும் விதமாகவும் அமைந்துள்ளது. யாப்பதிகாரத்தின் மொத்த நூற்பாக்களின் எண்ணிக்கை 27 ஆகும். இவ்விருபத்தேழு நூற்பாக்களில் 10 நூற்பாக்கள் மட்டுமே யாப்பின் உறுப்புக்களைச் சுட்டுவதாக உள்ளன. மீதமுள்ள 17 நூற்பாக்களும் சிற்றிலக்கிய முறைமையைச் சுட்டுகிறது. யாப்பதிகார செய்யுட்கள் கலிப்பாவால் அமைந்துள்ளன.

**முத்து வீரியம்**

ஐந்திலக்கண நூல்களுள் மிகவிரிந்த நூலாக விளங்குவது முத்துவீரியம். இந்நூல் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என ஐந்திலக்கணங்களையும் சுட்டுகிறது. ஒவ்வொரு அதிகாரமும் மூன்று மூன்று இயல்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இந்நூலில் அமைந்த மொத்த நூற்பாக்களின் எண்ணிக்கை 1288 ஆகும்.

**யாப்பு - பிரிவு**

சுவாமிநாதத்தைப் போலவே முத்துவீரிய யாப்பதிகாரமும் மூன்று பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. உறுப்பியல் (38), செய்யுளியல் (61), ஒழியியல் (167) என இவற்றிற்கு முன்பாகத் தற்சிறப்புப்பாயிரம் ஒன்று இடம்பெற்றுள்ளது. ஆக, யாப்பதிகாரத்தின் மொத்த நூற்பாக்களின் எண்ணிக்கை 267 ஆகும். யாப்பதிகாரம் மட்டும் உடையதாக வெளியான முதல் பதிப்பில் அவ்வதிகாரத்திற்குரிய நூற்பா 124 ஆகும் (உறுப்பியல் 38, செய்யுளியல் 58, ஒழியியல் 28) இதனை நோக்கும்போது நூலாசிரியர் யாப்பதிகாரத்திற்குப் பின் சில நூற்பாக்களைச் சேர்த்தும், மாற்றியும் முழுநூலில் உள்ள யாப்பதிகாரத்தை உருவாக்கியிருத்தல் வேண்டும். இந்நூலின் நூற்பாக்கள் ஆசிரிய யாப்பால் அமைந்துள்ளன. யாப்பதிகாரத்தில் உள்ள நூற்பாக்கள் பெரும்பாலும் யாப்பருங்கலத்தினையும், காரிகையினையும் பின்பற்றி அமைந்துள்ளன. சான்றுச் செய்யுள்களும் காரிகையில் உள்ளனவேயாகும்.

**யாப்பியல் உறுப்புகள்**

சுவாமிநாதம் யாப்பின் உறுப்புகள் எட்டெனக் கூறுகின்றது. அவை,

1. எழுத்து 2. அசை 3. சீர்
4. தளை 5. அடி 6. தொடை
7. பா 8. பாவினமும் ஆகும்.

முத்துவீரியம் யாப்புக்கான உறுப்புகள் 6 ஆறு என உணர்த்துகின்றது. அவை,

1. அசை 2. சீர் 3. தளை
4. அடி 5. தொடை 6. பாவும் அதன் இனமும்

இதனை,

**"எழுத்துமுதல் இரண்டு, சார்பு ஈரைந்தாய், ஈராறு**
**என்பர்அசை இரண்டு, முப்பான்சீர், தளைஏழ், அடிஐந்து**
**ஒழுக்கின்ஐம் பான், ஒன்று தொடை ஒன்பான் ஆறு ஒன்பான்**
**உடன் இரண்டாய் விரி, நாற்பா மூன்று இனம்யாப்பியலாம்"**

**(சுவாமி,நூ.1,வரி.1-4)**

என்ற நூற்பாவின் மூலம் சுவாமிநாதத்தின் யாப்பு உறுப்புகளை அறியமுடிகிறது. ஆனால் முத்துவீரியமானது இதுபோன்று நூற்பாவினைக் கூறவில்லை. இதனுடைய உள்ளடக்கத்தை வைத்துக் கொண்டே யாப்பு உறுப்புகளை அறியமுடிகிறது.

சுவாமிநாதம் மற்றும் முத்துவீரியம் ஆகிய இரு நூல்களைக் காணும்போது யாப்பு உறுப்புகள் மற்றும் வைப்புநிலை கூறும் செய்யுள் இவற்றுள் உள்ள வேறுபாடுகளைக் காணமுடிகிறது.

**எழுத்து**

எழுத்துக் கோட்பாட்டினை எழுத்ததிகாரத்தில் அதன் பெயர் முறைகளை சாமிகவிராயர் உணர்த்துகிறார். அவை,

**"டயீடிராலி ஓர்ந்து எழுதில்எழுத் தாம் அவற்றுள் உயிர், மெய்**
**யறுகுறுக்க(ம்), மூவினங்கள், குறில், நெடில், சுட்டுவினா**
**இயல் உயிர்மெய், ஆய்த(ம்), முதல் சார்புபோ லியினொடு**
**இரண்டளபாம் இருபதிரண் டெழுத்தின் போகமே"**

**(சுவாமி,நூ.2,வரி.5-8)**

மொழிக்கு காரணமாக உள்ள ஒலியை எழுதுவது எழுத்து எனப்படும் என்பதை சுவாமிநாதம் விளக்குகிறது. பின்னர் எழுத்துக்களின் பெயர்கள் உயிர், மெய், ஐகாரக்குறுக்கம், ஔகாரக்குறுக்கம், ஆய்தக்குறுக்கம், மகரக்குறுக்கம், குற்றியலிகரம் என்றும் மூன்று இனமான வல்லினம், மெல்லினம், இடையினம், இவற்றோடு குறில், நெடில், சுட்டு, வினா, உயிர்மெய், ஆய்தம், முதல் எழுத்துக்கள், சார்பு எழுத்துக்கள், போலி எழுத்துக்கள், அளபெடைகளான உயிரளபெடை, ஒற்றளபெடை என இருபத்திரண்டு ஆகும் எனச் சுட்டுகிறார்.

எழுத்துக்களின் பெயர்களைச் சுட்டியதோடு உயிர், மெய், சார்பெழுத்துக்கள் எவை என்பதனையும் பின்வருமாறு உணர்த்துகிறார்.

**"அகராதி யீராதும் உயிர், ககராதிகள் மூவாறும் உடல்" இம்**
**முப்பானு(ம்) முதலெழுத்தாம்" ஆய்த(ம்)**
**இகல் குறளின் இஉஐஔவே ஆய்த(ம்) மவ்ஓரொன்றாய் உயிர்மெய்**
**நூற்றெணிநட்டு, (உ)ரயிளவு ஏழ்"ஒற்றின்"** **(சுவாமி.நூ.3,வரி.1-4)**

அவையாவன, அகரம் முதலான பன்னிரண்டும் உயிர் எழுத்துக்கள் எனவும் ககரம் முதலாக உள்ள பதினெட்டும் மெய் எழுத்துக்கள் எனவும் கூறி இவை இரண்டுமான முப்பதும் முதலெழுத்தாகும் என்கிறார். பின்னர் சார்பெழுத்துக்கள் எனக் கூறப்படும் ஆய்தம், குற்றியலிகரம், குற்றியலுகரம், ஐகாரக்குறுக்கம், ஔகாரக்குறுக்கம், ஆய்தக்குறுக்கம், மகரக்குறுக்கம், உயிர்மெய், உயிரளபெடை, ஒற்றளபெடை பத்தெழுத்துக்களையும் கூறுகின்றார்.

இதனைத் தொடர்ந்து உயிர், மெய் ஆகிய முப்பதும், சார்பெழுத்து பத்தும் எவ்வுறுப்புகளின் துணையோடு பிறக்கின்றன என எழுத்துப் பிறப்பினை சுவாமிநாதம் கூறுகிறது. மேலும் யாப்பதிகார உறுப்பு மரபானது.

**"எழுத்து-முதல் இரண்டு, சார்பு ஈரைந்தாய், ஈராறு**
**என்பர் ................................................................"** (சுவாமி, நூ.152,வரி.1-2)

என்னும் இந்நூற்பா அடிகள் மூலமாக முதலெழுத்தானது (உயிர்,மெய்) என இரண்டு வகையாகவும், சார்பெழுத்துக்களான (குற்றியலுகரம், குற்றியலிகரம், ஆய்தம், உயிரளபெடை, ஒற்றளபெடை, ஐகாரக்குறுக்கம், ஔகாரக்குறுக்கம், மகரக்குறுக்கம், ஆய்தக்குறுக்கம், குற்றியலுகரகுறுக்கம் பத்தினையும் சேர்த்து எழுத்துக்கள் பன்னிரண்டு என்று குறிப்பிடுகிறார். சுவாமிநாதத்தில் யாப்பு உறுப்புக்களுள் முதலாவதாக வைத்துக் கூறப்பட்ட எழுத்து என்பதைப் பற்றி முத்துவீரியம் யாப்பதிகார உறுப்பில் கூறவில்லை. இருப்பினும் ஒழிபியலில் இகர, உகர, ஐகார குறுக்கங்கள் அலகு பெறாத விதத்தை,

**"தளையுஞ் சீருந் தபவரிற் குறுகிய**
**இ, உ, ஐ, யு மிசைபெறா வென்ப"** (மு.வீ.நூ.962)

மெற்கண்ட நூற்பா மூலமாக உணரமுடிகிறது. இவற்றொடு உயிரளபெடை அலகு பெறா இடம் பற்றி,

**"அளபெடை யாவியு மவற்றொ ரற்றெ"** (மு.வீ.நூ.963)

என்பதையும்,

**"ஆய்தமு மொற்று மளபெர் நிற்புழி**
**வெறல டிகய்தும் விதியின வாகும்"** (மு.வீ.நூ.964)

ஆயுதமும், ஒற்றும் அலகு பெறும் என்பதையும் முத்துவீரியம் குறிப்பிடுகிறது.

**அசை**

அசை இரண்டு வகைப்படும். அவையாவன 1. நெரசை, 2. நிரையசை என்பதை,

**"அசை இரண்டாய் நான்கு இயற்சீர் அகவற்காம்"** (சுவாமி.நூ.153,வ.1)

என்று சுவாமிநாத யாப்பதிகார நூற்பா குறிப்பிடுகிறது. ஆனால் முத்துவீரியத்தில் நெரசை, நிரையசை என நெரசை நிரையசைக்கான முறைகள் (பிரிப்பு) விளக்கப்படுகிறது.

**சீர்**

அசைச்சீர் இரண்டு. அவை, நேர், நிரை ஆகும். சீர் மூன்று வகை என சுவாமிநாதம் குறிப்பிடுகிறது. அவை, இயற்சீர், உரிச்சீர், பொதுச்சீர் ஆகும். இதனை,

**"அசை இரண்டாய், நான்குசீர் இயற்சீர் அகவற்காம் உரிச்சீர்**

**அசை ஷன்றாய், எட்டாம் நேர் ஈறுவெள்ளை நிரைஈறு**

**அசையும்வஞ் சிக்கு ஓரசைச் சீர் இரண்டு நாலசைச்சீர்**

**எண்ணிரண்டும் பொதுவு, இவை முப்பான்சீர்"** **(சுவாமி,நூ.153,வரி.1-4)**

ஓரசைச் சீர் இரண்டும், நாலசைச் சீர் பதினாறும்-பொதுச்சீர் எனப்படும் என்கிற விளக்கத்தைச் சுவாமிநாதம் தருகிறது. சுவாமிநாதத்தில் பாவிற்கான சீர்கள், வாய்ப்பாடு என்ற தனி நூற்பா அமைப்பினைக் காணமுடியவில்லை. முத்துவீரியத்தில் பாவிற்கான சீர்கள் அவற்றிற்கான வாய்ப்பாடுகள், உதாரணங்கள் போன்ற அமைப்பு நிலையைக் காணமுடிகிறது.

சுவாமிநாதத்தில் நாலசைச் சீர் பதினாறு என்ற குறிப்பு மட்டுமே காணப்படுகிறது. முத்துவீரியத்தில் பதினாறு நாலசைச் சீர் பதினாறுக்கும் (தண்ணிரழல், தண்பூ, நறும்பூ, நறுநிழல் என்ற வாய்ப்பாடுகள் கொண்டு விளக்கியிருப்பதைக் காண முடிகிறது.

**தளை**

சுவாமிநாதம் தளைகள் ஏழு என்று குறிப்பிடுகிறது. (சுவாமி,நூ.153,வரி.5-8) என்ற நூற்பா கூறுகின்றது. வெண்பாவிற்கான தளைகள் இரண்டு எனக் கூறுகின்றது. இந்நூல் தளைகள் ஏழு எனவும் அவை எந்தெந்தப் பா வகைகளுக்குள் அடங்குகிறது எனவும் விளக்குகிறது.

**முத்துவீரியத்தில் தளை**

சுவாமிநாதத்தைப் போலவே முத்துவீரியமும் தளைகள் ஏழு எனத் தனித்தனி நூற்பாக்கள் மூலமாக விளக்கிச் செல்கிறது. சுவாமிநாதத்திலும், முத்துவீரியத்திலும் தளைகள் ஏழு வகை என்பது விளங்குகிறது. ஈரசை ,மூவசை, நாலசைச் சீர்கள் தளை கொள்ளும் விதம் பற்றிய கருத்துக்கள் இரண்டு நூல்களிலும் பொதுவாகவே அமைகின்றன. சுவாமிநாதம் ஓரசைச்சீருக்குத் தளை உண்டு எனக் குறிப்பிடவில்லை. ஆனால் முத்துவீரியம் நாள், மலர் என்னும் ஓரசைக்கு முன்னர் நேர், நிரையசைகள் வருவது கொண்டு நேரொன்றாசிரியத்தளை, இயற்சீர் வெண்டளை, நிரையொன்றாசிரியத்தளை பெறும் விதம் பற்றிக் வுறுகிறது.

**அடி**

இரண்டு முதல் ஐந்துக்கும் மெற்பட்ட சீர்கள் அடியாகும். அடி ஐந்து வகையானது என்பதை,

**"தளையொன்று, குறள்இரண்டு, சிந்துமூன்று, அளவு**

**தளை, நான்கு நெடில், அடிஐந்து ஆதிகழி நெடிலாம்**

**தெளிஅடி ஐந்து இவையாம் வெண் பாக், கலிவஞ்சிக்கே,**

**சிறுமை இரண்டு, அகவல் ஒன்றாம் பெருமைபொருள் முழவாம்"**

**(சுவாமி,நூ.154,வரி.1-4)**

என சுவாமிநாதம் கூறுகின்றது. ஓரடியில் இரண்டு சீர் முதல் ஐந்துக்கும் மேற்பட்ட சீர்கள் வரலாம்.

ஒவ்வொரு அடிக்கும் தனித்தனி நூற்பா கூறுவதோடு மட்டுமன்றி, பாக்களுக்கான அடிச் சிறுமையையும், அடிப்பெருமையையும் முத்துவீரியம் குறிப்பிடுகிறது. சுவாமிநாதத்தில் வெண்பா, கலிப்பா, வஞ்சிப்பா ஆகிய மூன்று பாக்களுக்கும் குறைந்த அளவு அடிவரையறை இரண்டு என்று

குறிப்பிடப்படுகிறது. ஆனால் முத்துவீரியத்தில் அடிவரையறை வெண்பாவிற்கு இரண்டு என்றும், அகவலுக்கும், வஞ்சிக்கும் மூன்று என்றும், கலிப்பாவிற்கு நான்கு என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

சுவாமிநாதம் அகவல் பாவிற்கு ஒரு அடி என்கிறது. ஆனால் யாப்பருங்கலக்காரிகை 'அகவல் மூன்றாம்' என இருக்க வெண்டும் என்பதை உணர்த்துகிறது. அடிப்பெருமையைச் சுட்டும் பொது மிக நீண்ட அளவு, பொருள் முடிவைப் பொறுத்து என்பதில் இரு நூல்களும் ஒன்றுபடுவதைக் காணலாம்.

**தொடை**

சுவாமிநாதமும், முத்துவீரியமும் தொடை வகைகள் எட்டு என்பதை உணர்த்துகின்றது. தொடை பற்றியும், அவற்றின் விகற்பங்கள் பற்றியும் சுவாமிநாதம் உணர்த்துகின்றது. ஆனால் முத்துவீரியமானது தொடையையும், அதன் விகற்பகங்கள் முப்பத்தைந்தையும் தனித்தனி நூற்பாக்கள் கொண்டு விளக்குகிறது. அந்தாதித் தொடை, இரட்டைத் தொடை, செந்தொடை மூன்றினையும் தவிர்த்து பிற ஐந்து தொடைகளோடு இணை, பொழிப்பு, ஒரூஉ, கூழை, மேற்கதுவாய், கீழ்க்கதுவாய், முற்று சேர்ந்து தொடை விகற்பங்கள் முப்பத்தைந்தினையும் இருநூல்களும் குறிப்பிடுகின்றன. (சுவாமி,நூ.154,வரி.6-8)

சுவாமிநாதம் மற்றும் முத்துவீரியம் ஆகிய இவ்விரு நூல்களையும் ஒருங்கே ஆயும் போது தொடை, மற்றும் தொடை விகற்பங்கள் ஆகிய இரண்டும் ஒருமித்த கருத்துக்களைக் கூறுகின்றன. நூற்பா அமைப்பு முறையிலும், வரிசைப்படுத்தலிலும் மட்டுமே முன்பின்னான வேறுபாடுகளைக் காணமுடிகிறது. ஒரே நூற்பாவின் மூலமாகத் தொடையையும், அதன் விரியையும் சுவாமிநாதம் உணர்த்திச் செல்கிறது.

முத்துவீரியமானது தொடை மற்றும் விரி ஆகிய இரண்டினையும் தனித்தனியே விளக்குகிறது. தொடையின் வகை எட்டு, அதன் விகற்பங்கள் 35 என்ற ஒருமித்த கருத்தினையே இரு நூல்களும் விளக்குகின்றன.

**பாவும் பா இனமும்**

**பா வகைகள்**

பா வகைகளை விளக்குகின்ற பொழுது சுவாமிநாதம் நான்கு என்றும், முத்துவீரியம் ஐந்து என்றும் விளக்குகின்றது. சுவாமிநாதத்தில் யாப்பதிகார உறுப்பு மரபில் நாற்பா எனச் சுட்டுவதிலிருந்து நான்கு பா-வகைகளை உடையது என்பதை அறியமுடிகிறது. பின்னர் பாவின மரபு என்பதில் ஒவ்வொரு பாவின் வகைகளையும், தனித்தனியெ விளக்குகிறது. ஆனால் முத்துவீரியமானது பாவின் வகைகளை ஐந்தெனச் சுட்டுகிறது. முத்துவீரியத்திலும் பாவின் வகைகளைச் சுட்டுவதற்டகெனத் தனி நூற்பா எதுவும் இல்லை.

| **சுவாமிநாதம்** | **முத்துவீரியம்** |
|---|---|
| 1. வெண்பா | 1. வெண்பா |
| 2. ஆசிரியப்பா | 2. ஆசிரியப்பா |
| 3. கலிப்பா | 3. கலிப்பா |

4. வஞ்சிப்பா 4. வஞ்சிப்பா

5. மருட்பா

இவ்வாறு பா-வகைகளைச் சுவாமிநாதம், நான்கெனவும், முத்துவீரியம் மருட்பாவோடு சேர்த்து ஐந்தெனவும் விளக்குகிறது.

**வெண்பா**

சுவாமிநாதம் வெண்பாவிற்கான பொது இலக்கணத்தை வரையறுத்து அதன் வகைகளை விவரிக்கின்றது.

**"அருள்பாவில் வெள்ளைசெப்பல், அளவுபின்சிந்து**
**அசை இரண்டேல் உவ்வாம்........ இறும்ஓர்"** **(சுவாமி,யா.நூ.156,வரி1-2)**

முத்துவீரியமானது,

**"வெண்பா வளவழ வேண்டப் படுமெ"** **(மு.வீ.நூ.901)**

**"நேர்நா ணிரைமலர் தேமாக் காசு**
**புளிமாப் பிறப்பெனப் புகலப் படுமே"** **(மு.வீ.நூ.911)**

சுவாமிநாதத்தில் கூறப்பட்டதுபோல் பொது இலக்கணத்தை தராமல் தொடக்கத்தில் ஒரு குறிப்பையும், வெண்பாவின் வகைகளைக் கூறிய பின்னர் ஒரு குறிப்பையும் தந்துள்ளது. அக்குறிப்புகளைக் கொண்டு, பொது இலக்கணத்தை அறிந்து கொள்ள வேண்டியுள்ளது. பொது இலக்கணம் என்ற ஒன்றினைத் தனியாக முத்துவீரியம் குறிப்பிடவில்லை.

- வெண்பா என்றால் ஒரு அடி நான்கு சீர்களைப் பெற்று வரும்.
- இறுதி அசையானது நேர்-என முடிந்தால் நாள், நிரை-என முடிந்தால் மலர், தேமா-வில் மடிந்தால் காசு, புளிமா-வில் முடிந்தால் பிறப்பு எனவும் பெயர் பெறும் என்ற பொதுக் குறிப்புகளை மட்டுமே காணமுடிகிறது.
- இரண்டு நூல்களின் பொது-இலக்கணத்தைக் காணும் போது சுவாமிநாதமானது. விரிவான விளக்கத்தையும், முத்துவீரியமானது இரு குறிப்புகளையும் கொண்டவையாக உள்ளன என்பதை அறியலாம்.

**வெண்பா வகைகள்**

வெண்பாவின் வகைகளை சுவாமிநாதம் ஒன்பதெனவும் முத்துவீரியமும் எட்டு எனவும் குறிப்பிடுகின்றன. தொன்னூல் விளக்கம் தனி வெண்பா வகையாகக் கூறிய சவலை வெண்பா என்பதை முத்துவீரியமும் குறிப்பிடுகிறது. ஆயினும் எண்ணிக்கை அடிப்படையில் காணும் பொழுது சுவாமிநாதமானது ஒன்பது வகை எனவும், முத்துவீரியமானது எட்டு வகையெனவும் வேறுபடுகிறது. பிற இலக்கண நூல்கள் வெண்பா வகையினை நான்கு, ஐந்து, ஆறு, ஏழு எனச் சுட்டுகின்றன.

**வெண்பாவிற்குரிய நாள், நிறம் முதலியன**

முத்துவீரிய ஒழிபியலில் நான்கு பாவிற்குமான நாள், நிறம் முதலியன குறிப்பிடப்படுகிறது.

**"வெண்பா வெண்ணிறம் விருச்சிகங் கார்த்திகை**

**முதலிய வெழுநாண் முற்படு விருச்சிக**

**மீன மிராசி விப்பிர குலமதி**

**குருவே கிரகங் குழுமிய முல்லை**

**இருநில மற்றத னியல்பென மொழிப"** **(மு.வீ.நூ.1012)**

வெண்பாவிற்கான நிறம் வெண்ணிறம், கார்த்திகை முதலான ஏழு நாட்கள், விருச்சிகம், மீனம் ஆகிய இரண்டு இராசிகள், குலமானது பிராமண குலம், கோள்களாகிய கிரகம் சந்திரனும், வியாழனும், நிலமானது. முல்லை நிலம் என்பது போன்று வெண்பாவிற்கான நிறம், நட்சத்திரம், கோள்கள், இராசிகள், குலம், நிலம் என்பவற்றினைக் காணமுடிகிறது.

**வெண்பாவின் ஓசை**

சுவாமிநாதத்தில் வெண்பாவிற்கான பொது இலக்கணம் கூறும் இடத்தே வெண்பாவிற்கான ஓசை, செப்பல் ஓசை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் முத்துவீரியத்தில் வெண்பாவிற்குரிய ஓசை செப்பலோசை எனவும், அதன் வகைகள் ஏந்திசைச் செப்பல், தூங்கிசைச் செப்பல், ஒழுகிசைச் செப்பல் என்று மூன்று வகையன எனவும் குறிப்பிடப்படுகிறது.

**வெண்பாவின் இனம்**

வெள்ளொத்தாழிசை, வெண்டுறை, வெளிவிருத்தம் ஆகிய மூன்றும் வெண்பாவுக்கு இனமாக வரும். (சுவாமி,நூ.157,வரி,1-4) குறள் வெண்பாவுக்கு இனம், குறள் வெண்செந்துறையும், குறள் தாழிசையும் ஆகும் என்று வெண்பாவின் இனத்தினை ஒரே நூற்பாவில் சுவாமிநாதம் குறிப்பிடுகிறது. ஆனால் முத்துவீரியமானது வெண்பாவின் மூவகை இனத்தையும், குறள் வெண்பாவின் இருவகை இனத்தையும் தனித்தனியே விளக்குகிறது. வெண்பாவிற்கான இனத்தில் எவ்வகையான வேறுபாடுகளும் காணப்படவில்லை.

**ஆசிரியப்பா**

ஆசிரியப்பாவிற்கு சுவாமிநாதம் பொது இலக்கணம் கூறுகையில்,

**"சொல்அகவல் இசை ஐந்து ஈறு அளவடி ஆசிரிய(ம்)"** **(சுவாமி,நூ.157,வ.6)**

என்று குறிப்பிடுகிறது. அதுவெ முத்துவீரியத்தில்,

**"அகவலோசை யொடுமள வடித்தாய்**

**வருவ தகவற் பாவென மொழிப"** **(மு.வீ.நூ.922)**

என்ற பொது இலக்கணம் கூறப்படுகிறது.

**வகைகள்**

ஆசிரியப்பாவின் வகைகளை கூறும் பொழுது இரு நூல்களும் வேறுபடுகின்றன. சுவாமிநாதமானது ஆசிரியப்பாவின் வகைகள் ஆறு எனவும், முத்துவீரியமானது பாவகையில் நான்கு எனவும் வகைப்படுத்துவதில் வேறுபடுகின்றன.

**அகவற்பாவிற்குரிய நாள், நிறம் முதலியன**

**"அகவல் செந்நிற மரைய குலமகம்**

**பூர முதலிய வெழுநாண் மேடஞ்**

**சிங்க விராசி செங்கதிர் செவ்வாய்**

**கிரகங் குறிஞ்சி நிலனா கும்மெ"** **(மு.வீ.நூ.1013)**

அகவற்பா செந்நிறமானது, சத்திரிய குலம், மகம் முதலிய ஏழு நாள், மேடம், சிங்கம், தனுசு இராசி, சூரியன், செவ்வாய் கிரகம், நிலம்-குறிஞ்சி நிலம் என ஆசிரியப்பாவிற்கான நாள், நிறம் என முத்துவீரியம் குறிப்பிடுகிறது.

**ஆசிரியப்பாவின்-ஓசை**

ஆசிரியப்பாவின் ஓசை அகவல் ஓசை எனவும், அதன் வகைகள் ஏந்திசை அகவல், தூங்கிசை அகவல், ஒழுகிசை அகவல் என அகவற்பாவின் ஓசை வகைகள் மூன்றினையும் முத்துவீரியம் தனித்தனியே தெளிவாகச் சான்றுகளுடனும் விளக்குகிறது. ஆனால் சுவாமிநாதம் ஆசிரியப்பா அகவல் ஓசை உடையது என்பதை மட்டுமே குறிப்பிடுகிறது.

**ஆசிரியப்பாவின்-இனம்**

அகவற்றாழிசையை சுவாமிநாதம் கூறுகின்றது.

**"நெடியமுன் றடியொத்தல் அகவற்றா ழிசையா(ம்)**

**நேர்ஒத்துஈற் றயல்குறைதல், இடைகுறைதல், மடக்கல்**

**இடைகுறைந்து மடக்கல், அக வற்றுறைநான்**

**எய்துகழி நெடில்விருத்தம், இனம் மூன்றாங் கலப்பே"**

**(சுவாமி,நூ.158,வரி.5-8)**

**கலிப்பா**

சுவாமிநாதமானது,

**"கலிப்பாநே ரடிதுள்ளல் இருசுரித கம்பின்**

**காட்டும் ..................................................."** **(சுவாமி,நூ.159,வரி,1-2)**

- கலிப்பா நான்கு அடிகளைக் கொண்ட நேரடியாகும்.
- துள்ளல் ஓசை உடையது.
- சுரிதகம் பின் வந்து முடியும் என்று விளக்குகிறது.

அதுவே முத்துவீரியம்,

**"அளவடி யாய்த்துள லமைந்து வருவது**

**கலியா மென்மனார் கற்றுணர்ந் தோரே"** **(மு.வீ.நூ.934)**

- அடி நாற்சீராய் வரும்.
- துள்ளல் ஓசை உடையது என்று விளக்குகிறது.

**கலிப்பா வகைகள்**

சுவாமிநாதம், முத்துவீரியம் ஆகிய இரு நூல்களும் கலிப்பாவின் வகைகள் ஒன்பது என ஒருமித்த கருத்தினையே கூறுகின்றன.

ஒத்தாழிசை மூன்று வகையினையும், கொச்சகக் கலி ஐந்து வகையினையும் வெண்கலி ஒன்றினையும் சேர்த்து ஒன்பது வகை எனக் கலிப்பாவை இரு நூல்களும் வகைப்படுத்திக் கூறுகின்றன. இவற்றில் வேறுபாடுகள் எதுவும் காணப்படவில்லை.

**கலிப்பாவிற்குரிய நாள், நிறம் முதலியன**

**"கலிபொன் னிறங்குலம் காமரு வணிகம்**
**அகணி நெடுநில மனுட முதலிய**
**ஆறுநாண் மிதுனங் கும்பந் துலாமும்**
**இராசி புதன்சனி கிரகமென் றியம்புப"** **(மு.வீ,நூ.1014)**

கலிப்பாவிற்கான நிறம் பொன்னிறம், குலம்-வணிக குலம், நிலம்-மருதநிலம், அனுடம்-முதல் ஆறும் நாள், மிதுனம், கும்பம், துலாம் மூன்றும் இராசி. புதன், சனி கிரகம் எனக் கலிப்பாவிற்கான ஆறும் முத்துவீரியம் குறிப்பிடப்படுகிறது.

**கலிப்பாவின் ஓசை வகை**

கலிப்பாவிற்கான ஓசை துள்ளல் ஓசை ஆகும். அத்துள்ளல் ஓசையானது ஏந்திசைத் துள்ளல், பிரிந்திசைத் துள்ளல், அகவற்றுள்ளல் என மூன்று வகையினை உடையது என்று கலிப்பாவின் ஓசை வகைகளை வீரியம் சுட்ட, சுவாமிநாம் ஓசையை மட்டும் சுட்டுகிறது. மேலும்,

ஓசை வகையில் ஏந்திசை, பிரிந்திசை, தூங்கிசை என்ற மூன்று வகையினில் மூன்றாவது ஓசை வகையாக அகவற்றுள்ளல் என்பதை புதிதாக முத்துவீரியம் சுட்டுகிறது.

**பாவினங்கள்**

**"அளவுஒத்துஈறு உயர்த்துஅடிமட் டிலகலித்தா ழிசை நான்கு**
**அழநெடிலும் அதிற்பன்னேழ் பன்னாறு எண் முடிவுங்**
**களவற்ற கலித்துறைநே ரடிநான்கு பெறுதல்**
**கலிவிருத்தம் இன(ம்) மூன்றாந்................................"**
**(சு.நா.யா.நூ.160,வரி.1-4)**

மேற்கண்ட நூற்பா மூலமாக சுவாமிநாதம் கலிப்பாவின் இனங்கள் மூன்று என்று குறிப்பிடுவது போலவே முத்துவீரியமும் மூன்று என்றே குறிப்பிடுகிறது. அவை,

1. கலித்தாழிசை
2. கலித்துறை
3. கலிவிருத்தம் ஆகும்.

**வஞ்சிப்பா**

வஞ்சிப்பா தூங்கல் ஓசை பெற்று வரும் என்பதனைப் பொது இலக்கணமாக இரு நூல்களிலும் காணமுடிகிறது.

**வகைகள்**

- குறளடி வஞ்சிப்பா

➢ சிந்தடி வஞ்சிப்பா என்று வஞ்சிப்பா இரண்டு வகை என்பதையே இரு நூல்களும் குறிப்பிடுகிறது.

**வஞ்சிப்பாவிற்குரிய நாள், நிறம் முதலியன**

**"வஞ்சி நிறங்கறுப்பு வாருதி கெய்தல்**
**நிலங்கடைக் குலம விட்டமுத லேழு**
**நாளிட பங்கனி மகர மிராசி**
**வெள்ளி யிராகு கிரக மென்ப"** **(மு.வீ.நூ.1015)**

வஞ்சிப்பாவின் நிறம் கறுப்பு, குலம்-சூத்திர குலம், அவிட்டம்-முதலிய ஏழு நாள், இடபம், கன்னி, மகரம் ஆகிய மூன்று இராசிகள், கிரகம்-வெள்ளி, இராகு இரண்டும், நிலம்-நெய்தல் நிலம்.

**வஞ்சிப்பாவின் ஓசை வகைகள்**

வஞ்சிப்பாவிற்கான ஓசை தூங்கலோசை என்பதை இரு நூல்களும் குறிப்பிடுகின்றன. வெண்பா, ஆசிரியப்பா ஆகிய இரண்டு பாக்களிலும் ஓசை வகையினைக் குறிப்பிடுகையில் ஒழுகிசை செப்பல், ஒழுகிசை அகவல் என்றே முத்துவீரியம் குறிப்பிட்டது. ஆனால் கலிப்பா மற்றும் வஞ்சிப்பா ஆகிய இரண்டு பாக்களில் ஓசை வகையினைக் கூறும்போது கலிப்பாவில்-அகவற்றுள்ளல் எனவும் வஞ்சிப்பாவில்-அகவற்றுங்கலோசை எனவும் சுட்டுகிறது.

**பாவினங்கள்**

**"...................................... குறளடிநான் குஒருமூன்று**
**உளதுற்ற தாழிசை அங்கு அவைஒன்று துறைசிந்**
**தொருநான்கு விருத்தம்வஞ் சியின் மூன்றின் சீரே"**

**(சு.நா..நூ.160,வரி.6-8)**

மேற்கண்ட நூற்பா வாயிலாக வஞ்சிப்பாவிற்கான பாவினங்கள் மூன்று.

**மருட்பா**

**"புறநிலை கைக்கிளை யென்றிப் பொருண் மிசை**
**வெண்பா முதல்வந் தகவல்பின் வருவது**
**மருட்பா வெனப்பெயர் வைக்கப் படுமே"** **(மு.வீ.நூ.961)**

இந்நூற்பா வழியாகச் சுட்டுகிறது என்பதை அறியமுடிகிறது.

**முடிவுரை**

புறநிலை, கைக்கிளை ஆகிய பொருள்களைக் கொண்டு வெண்பா முதலில் வந்து அகவல் பின் வருவது மருட்பா என முத்துவீரியம் பா-ஐந்து வகை எனச் சுட்டுவதை அறியமுடிகிறது. சுவாமிநாதம் பா-வெண்பா, ஆசிரியப்பா, வஞ்சிப்பா, கலிப்பா என நான்கு வகையினை மட்டுமே சுட்டுகிறது. மருட்பாவிற்கு பொது இலக்கணம் எதுவும் கூறப்படவில்லை. அதே பொல் ஓசை வகையும் கூறப்படவில்லை. மருட்பாவிற்கான நாள், நிறம் போன்றவையும் முத்துவீரியத்தில் கூறப்படவில்லை. தொல்காப்பியச் செய்யுளியலில் கூறியுள்ள இருபது வண்ணங்களையும், மரபியலில் கூறியுள்ள பத்துவகைக் குற்றங்களையும் மரபு மாறாமல் முத்துவீரியத்தின் யாப்பதிகார

ஒழிபியலில் குறிப்பிட்டுள்ளார். வண்ணம், குற்றங்கள் போன்றவற்றைப் பற்றிச் சுவாமிநாதம் குறிப்பிடவில்லை.

**துணைநின்ற நூல்கள்**


1. சண்முகம்.செ.வை(ப.ஆ), சுவாமிநாதம் மூலமும் விருத்தியுரையும், பதிப்புத் துறை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம், 1975.
2. சுந்தரமூர்த்தி.கு (ப.ஆ), முத்துவீரியம், கழக வெளியீடு, சென்னை,1972.
3. வெள்ளைவாரணன் (ப.ஆ), தொல்காப்பியம் செய்யுளியல் உரைவளம், பதிப்புத்துறை, மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை, 1989.


**References**


1. Shanmugam.Se.Vai, Suvaminatham Mulamum Viruththiyuraiyum, Publication Department, Annamalai University, Chidambaram, 1975.
2. Sundaramurthy.Ku, Muthuviriyam, Kazhaga Veliyidu, Chennai, 1972
3. Vellaivaranan, Tholkappiyam Ceyyuliyal Uraivalam, Publication Department, Madurai Kamaraj University, Madurai, 1989


**தமிழில் இக்கட்டுரையின் மேற்கோள்**


**சிவபாலன். ம " யாப்பியல் நோக்கில் முத்துவீரியம், சுவமிநாதம் - ஓர் ஒப்பீடு"** புலம் : பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ், தொகுதி 2, இதழ் 2, ஏப்ரல் 2022, பக். 19-30


**Cite this Article in English**


**Sivabalan. M "Muthuviriyam, Suvaminatham in Prosody perspective – a comparison "** Pulam: International Journal of Tamilology Studies, Vol.2 Issue 2, April 2022, pp. 19-30